வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P.1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.11.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 319 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# வடக்கு உட்பட நாடு முழுவதும் தேசிய மக்கள் சக்தி ஆதிக்கம்

## மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்டவும் வாய்ப்பு

கொழும்பு, நவம்பர் 15

**நேற்று நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் தேசிய மக்கள் சக்திக்கே பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. இன்று அதிகாலை 3.30 மணி வரையான தேர்தல் முடிவுகளை அடிப்படையாக வைத்து நோக்குகையில் தேசிய மக்கள் சக்தி மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கைப்பற்றவும் வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகிறது.**

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. நேற்றிரவு முதல் தேர்தல் முடிவுகள் வெளியாகின.

இன்று அதிகாலை 3.30 மணி வரையான முடிவுகளின்படி மட்டக்களப்பு மாவட்டம் தவிர ஏனைய 21 தேர்தல் மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தியே முன்னிலை பெற்றிருந்தது.

காலி தேர்தல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 9 ஆசனங்களில் 7ஐ தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றியது. ஐக்கிய மக்கள் சக்தியும் சிறீலங்கா பொது ஜன பெரமுனவும் தலா ஓர் ஆசனங்களை கைப்பற்றின.

இதேபோன்று, அம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களில் தேசிய மக்கள் சக்தி 5ஐயும் ஐக்கிய மக்கள் சக்தி, சிறீலங்கா பொது ஜன பெரமுன ஆகியன தலா ஓர் ஆசனத்தை கைப்பற்றியிருந்தன.

பொலநறுவை தேர்தல் மாவட்டத்தில் 5 ஆசனங்களில் 11

## தேர்தல் விதிகள் மீறல்: நேற்று மட்டும் 51 பேர் கைது!

கொழும்பு, நவ. 15

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 51 பேர் தேர்தல் தினமான நேற்று கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கைதானவர்களில் இருவர் வேட்பாளர்கள் என்றும் அவர்களிருவரும் வவுனியா, புத்தளம் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் எனவும் அவர் கூறினார்.

வாக்குச்சீட்டை படம் எடுத்தமை, வாக்குச் சீட்டைக் கிழித்தமை, பணம் விநியோகித்தமை, தாக்குதல் நடத்தியமை, பிரசாரத்தில் 11

## வடக்கு மக்களின் ஆதரவு தேர்தலில் எமக்கு கிட்டும்!

### ஜனாதிபதி அநுர நம்பிக்கை

கொழும்பு, நவ. 15

பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்களின் ஆதரவு கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கை உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பஞ்சிகாவத்தை அபேசிங்காராம விகாரையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு மையத்தில் வாக்களித்தமையை தொடர்ந்து ஊடகங்களுக்கு 11

## தமிழ் தேசிய கட்சிகளுக்கு மிகப்பெரும் பின்னடைவு!

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதல் தடவையாக தமிழ்த் தேசிய கட்சிகளை பின்தள்ளி தென்னிலங்கைக் கட்சி ஒன்று ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் நேற்றிரவு முதல் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், இன்று அதிகாலை வரையான முடிவுகளின் அடிப்படையில் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டம் தவிர, ஏனைய அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தியே 11

## வாக்கு எண்ணும் நிலையமருகே குழப்பம் ஏற்படுத்திய அர்ச்சுனா

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் வாக்கு எண்ணும் நிலையம் அருகே சுயேச்சை குழுவாக போட்டியிட்ட மருத்துவர் அர்ச்சுனா நேற்றிரவு குழப்பத்தில் ஈடுபட்டார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் நிலையமாக யாழ். மத்திய கல்லூரி செயல்படுகின்றது.

சுயேச்சை குழு வேட்பாளரான அர்ச்சுனா நேற்றிரவு வாக்கு எண்ணும் நிலையத்துக்கு வருகைதந்த நிலையில் தனது வாகனத்தை யாழ்ப்பாணம் பொது நூலகம் முன் பாக நிறுத்த முற்பட்டிருந்தார். அந்தப் பகுதியில் வாக னங்களை நிறுத்த பொலிஸார் 11

## மாத்தளையில் பஸ் விபத்து மூவர் பலி; 42 பேர் காயம்!

கொழும்பு, நவ. 15

பேருந்தும் வானும் மோதிய விபத்தில் மூவர் உயிரிழந்தனர். 42 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

மாத்தளை - லக்கலை - எலவாகந்தையில் நேற்று வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

பேருந்தும் வானும் மோதியதையடுத்து, பேருந்து மண்மேட்டில் மோதுண்டு கவிழ்ந்து விபத்துக்கு உள் ளானது. இதில் பேருந்தில் பயணித்த இருவரும் வானில் பயணித்த ஒருவருமாக மூவர் 11

## வடக்கு, கிழக்கில் வாக்களிப்பு 63.8%

யாழ்ப்பாணம், நவ. 15

நேற்று வியாழக்கிழமை நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் வாக்களிப்பு 63.84 சதவீதமே காணப்பட்டது. இது ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளிலும் பார்க்க 7. 6 குறைவாகும். (ஜனாதிபதித் தேர்தலில் 71. 4 சதவீத வாக்குப் பதிவு)

இந்த நிலையில், நேற்று நடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 60. 8 சதவீத வாக்குகளும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 65. 5 சதவீத வாக்குகளும் திருகோணமலையில் 67 சதவீத வாக்குகளும் மட்டக்களப்பில் 63.4, 11

## ஒரு வார காலத்துக்கு பேரணிகளுக்கு தடை

கொழும்பு, நவ. 15

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஒரு வார காலத்திற்கு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை முன்னெடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நேற்று மாலை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரையில் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்கு சட்டம் நடைமுறைக்கு வருமா இல்லையா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. தேவை ஏற்படின், அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஜனாதிபதியே அதனைத் தீர்மானிக்கவேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். (ஐ)

## யாழ். தேர்தல் மாவட்டத்தில் 60.8 வீதத்தினர் வாக்களிப்பு

- சி. சிலக்ஷன் -

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 60. 85 வீதமானவர்கள் வாக்களித்துள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 59.65 சதவீத வாக்களிப்பும் கிளிநொச்சி மாவட்டத்தில் 62.05 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன. இதன்படி, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 60.85 சதவீத வாக்குகள் பதிவாகின என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## வாக்களிக்காதோர் தொகை 61 இலட்சத்தை கடந்தது!

கொழும்பு, நவ. 15

நேற்று நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை சுமார் 61 இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகம் என்று கணிக்கப்படுகிறது. இது, ஜனாதிபதித் தேர்தலிலும் பார்க்க 15.5 சதவீதம் வீழ்ச்சியாகும்.

ஜனாதிபதித் தேர்தல் கடந்த செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்றது. பாராளுமன்றத் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் 2024 - தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

**தேர்தல் மாவட்டம் : யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 5,681 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 4,808 |
| சுயேச்சைக் குழு - 17 | 3,548 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 2,623 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 1,885 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,756 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,599 |
| புதிய ஜனநாயக முன்னணி | 140 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 776 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 493 |
| சுயேச்சைக் குழு 14 | 444 |
| பதியப்பட்ட வாக்குகள் | **25,902** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **25,582** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **756** |

**தேர்தல் மாவட்டம் : வன்னி**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 4,371 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 2,349 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,825 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,399 |
| சுயேச்சை குழு - 07 | 639 |
| சிறீ லங்கா தொழிலாளர் கட்சி | 634 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 502 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 287 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 210 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 88 |
| ஐக்கிய தேசிய கட்சி | 51 |
| பதியப்பட்ட வாக்குகள் | **14,060** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **13,783** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **466** |

**தேர்தல் மாவட்டம் : திருகோணமலை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,705 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,853 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 1,749 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 99 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 27 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 249 |
| புதிய ஜனநாயக முன்னணி | 382 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 140 |
| சர்வஜன அதிகாரம் | 112 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 29 |
| சுயேச்சைக் குழு 09 | 77 |
| பதியப்பட்ட வாக்குகள் | **16,807** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **14,518** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **622** |

**தேர்தல் மாவட்டம் : மட்டக்களப்பு**

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 5,236 |
| தேசிய மக்கள் சக்தி | 3,412 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 1,383 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,019 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 966 |
| பதியப்பட்ட வாக்குகள் | **14,003** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **13,845** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **214** |

**தேர்தல் மாவட்டம் : அநுராதபுரம்**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 43,030 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,275 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,146 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 876 |
| சர்வஜன அதிகாரம் | 386 |
| பதியப்பட்ட வாக்குகள் | **56,438** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **55,553** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,919** |

**தேர்தல் மாவட்டம் : கண்டி**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 44,819 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 4,698 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,770 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 928 |
| சர்வஜன அதிகாரம் | 892 |
| பதியப்பட்ட வாக்குகள் | **57,951** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **57,278** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,964** |

**தேர்தல் மாவட்டம் : மாத்தறை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 24,954 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,692 |
| புதிய ஜனநாயக முன்னணி | 1,823 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 548 |
| சர்வஜன அதிகாரம் | 641 |
| பதியப்பட்ட வாக்குகள் | **32,278** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **31,630** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **679** |

**தேர்தல் மாவட்டம் : பொலநறுவை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 16,052 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,184 |
| புதிய ஜனநாயக முன்னணி | 425 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 230 |
| சர்வஜன அதிகாரம் | 386 |
| பதியப்பட்ட வாக்குகள் | **20,616** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **20,199** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **504** |

**தேர்தல் மாவட்டம் : புத்தளம்**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,404 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,661 |
| புதிய ஜனநாயக முன்னணி | 672 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 454 |
| சர்வஜன அதிகாரம் | 159 |
| பதியப்பட்ட வாக்குகள் | **15,770** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **15,343** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **429** |

**தேர்தல் மாவட்டம் : பதுளை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 33,780 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,866 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,227 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 675 |
| சர்வஜன அதிகாரம் | 209 |
| பதியப்பட்ட வாக்குகள் | **43,502** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **42,897** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,196** |

**தேர்தல் மாவட்டம் : நுவரெலியா**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 13,937 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,477 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1,660 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 303 |
| ஐக்கிய ஜனநாயக குரல் | 201 |
| பதியப்பட்ட வாக்குகள் | **20,502** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **20,140** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **740** |

**தேர்தல் மாவட்டம் : மாத்தளை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 17,123 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,201 |
| புதிய ஜனநாயக முன்னணி | 954 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 637 |
| சர்வஜன அதிகாரம் | 200 |
| பதியப்பட்ட வாக்குகள் | **22,723** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **22,300** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **785** |

**தேர்தல் மாவட்டம் : கொழும்பு**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 28,475 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,985 |
| புதிய ஜனநாயக முன்னணி | 1,814 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 934 |
| சர்வஜன அதிகாரம் | 728 |
| பதியப்பட்ட வாக்குகள் | **37,069** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **36,466** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **964** |

**தேர்தல் மாவட்டம் : அம்பாந்தோட்டை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 17,326 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,623 |
| புதிய ஜனநாயக முன்னணி | 774 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 1,293 |
| சர்வஜன அதிகாரம் | 188 |
| பதியப்பட்ட வாக்குகள் | **22,684** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **22,248** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **572** |

**தேர்தல் மாவட்டம் : மொனராகலை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 19,986 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,297 |
| புதிய ஜனநாயக முன்னணி | 833 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 650 |
| சர்வஜன அதிகாரம் | 170 |
| பதியப்பட்ட வாக்குகள் | **26,326** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **25,721** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **711** |

**தேர்தல் மாவட்டம் : காலி**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 32,296 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,523 |
| புதிய ஜனநாயக முன்னணி | 1,964 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 1,846 |
| சர்வஜன அதிகாரம் | 607 |
| பதியப்பட்ட வாக்குகள் | **42,241** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **41,670** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **829** |

**தேர்தல் மாவட்டம் : இரத்தினபுரி**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 24,776 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,969 |
| புதிய ஜனநாயக முன்னணி | 1,528 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 1,031 |
| சர்வஜன அதிகாரம் | 463 |
| பதியப்பட்ட வாக்குகள் | **32,454** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **31,914** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **709** |

**தேர்தல் மாவட்டம் : களுத்துறை**

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 29,076 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,340 |
| புதிய ஜனநாயக முன்னணி | 1,913 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 1,160 |
| சர்வஜன அதிகாரம் | 613 |
| பதியப்பட்ட வாக்குகள் | **38,328** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **37,746** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **936** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.11.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புதிய பாராளுமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம்

பாராளுமன்றத் தேர்தலில் இந்த தடவை வாக்களிப்பு வீதம் கணிசமானளவுக்கு குறைந்துவிட்டது. இரு மாதங்களுக்கும் குறைவான காலத்துக்குள் இரு தேசிய தேர்தல்களை சந்திப்பதில் அரசியல் கட்சிகளுக்கு மாத்திரமல்ல மக்களுக்கும் ஏற்பட்ட சலிப்பே அதற்கு பிரதான காரணம் எனலாம்.

ஜனாதிபதித் தேர்தலை விடவும் பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் கூடுதலான அளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் என்று தேர் தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க ஏற்கனவே நம்பிக்கை வெளியிட்டிருந்தார். ஆனால், வாக்களிப்பு வீதம் அவரின் நம்பிக்கைக்கு மாறாகவே அமைந்துவிட்டது.

இலங்கையில் வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 ஆகும். செப்ரெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 36 இலட்சத்து 19 ஆயிரத்து 916 (79.46 சதவீதம்). வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை 35 இலட்சத்து 20 ஆயிரத்து 438. இது மொத்த வாக்குகளில் ஐந்தில் ஒரு பங்கு ஆகும் .

பாராளுமன்றத் தேர்தலில் நேற்றைய தினம் வாக்களிப்பு 60 - 65 சதவீதமாக இருந்ததாக வாக்களிப்பு முடிவடைந்த பிறகு தேர் தல் அவதானிகள் கூறினார்கள். இந்த ஆசிரிய தலையங்கம் எழுதப் பட்டுக் கொண்டிருந்த தருணம் வரை வாக்களிப்பு வீதம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து வெளியாகவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காத வர்களையும்விட கூடுதலானவர்கள் நேற்றைய தினம் வாக்களிப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை என்பது தெரிகிறது.

எது எவ்வாறிருந்தாலும், புதிதாக தெரிவு செய்யப்படும் பாராளு மன்றத்துக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் இருக்கிறது.

ஜனாதிபதியாக திஸநாயக்க பதவியேற்றதை அடுத்து நாட்டின் ஆட்சியதிகாரம் பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவபடுத்தி வந்த அரசியல் தலைவர்களிடமிருந்து அந்த வர்க்கத்துக்கு வெளியில் சாதாரண குடும்ப பின்னணியைக் கொண்ட ஓர் அரசியல்வாதியிடம் வந்துசேர்ந்தது. புதிய அரசியல் கலாசாரத்தையும் முறைமை மாற்றத்தையும் செய்யக்கூடியவராக பெரும்பான்மையான வாக்காளர்களால் அடையாளம் காணப்பட்டு, ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்ட திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் வசதியான பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றி அரசாங்கத்தை அமைக்கப்போகிறது.

புதிய பாராளுமன்றம் செப்ரெம்பரில் நடைபெற்ற அதிகார மாற்றத்தை பூர்த்தி செய்வதாக அமைகிறது. அத்துடன் தேசிய மக் கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி.) சுமார் 60 வருடங்களுக்கு முன்னரான அதன் பிறப் பில் தொடங்கிய அரசியல் அதிகாரத்தை நோக்கிய பயணம் இரு ஆயுதக் கிளர்ச்சிகளின் பயங்கரமான அனுபவங்களைக் கடந்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து இன்று பாராளு மன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றி ஒரு முழு வட்டத்தை பூர்த்தி செய்திருக்கிறது. இந்த உருநிலை மாற்றம் ஜே. வி. பி. / தேசிய மக்கள் சக்திக்கு மாத்திரமல்ல, இலங்கைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024

"ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."
- அமிற் றே (இந்திய ஆன்மீகக் குரு)



# மூதாட்டி கூறிய சின்னத்துக்கு பதிலாக வேறு சின்னத்துக்கு புள்ளடியிட்டவர் பணிநீக்கம்

கொழும்பு, நவ. 15

வாக்குச்சாவடியில் வாக்க ளிக்கச் சென்ற வயோதிபப் பெண், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத் தரிடம் சின்னமொன்றை கூறி, அதில் புள்ளடியிட்டு உதவி செய்யுமாறு கேட்க, அப்பெண் கூறிய சின்னத் துக்கு பதிலாக வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிட் டுக் கொடுத்த உத்தியோகத் தர் உடனடியாக கடமையிலி ருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு காத்தான் குடி ஹிஸ்புலா பாலர் பாடசாலை வாக்குச்சாவடி யில் கடமையாற்றிய உத்தியோகத்தரே பணியிலி ருந்து விலக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பாராளுமன்ற தேர்தல் நடை பெற்று வரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத் தின் காத் தான்குடி வாக்குச் சாவடியில் வாக்குப் பதிவின் போது வயோதிபப் பெண் ணுக்கு உதவி செய்ய முன் வந்த உத்தியோத்தர், தவ றான சின்னத்தில் புள்ளடி யிட்டுக் கொடுத்த காரணத் தால் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள தாக தேர்தல் உதவி ஆணை யாளர் எம்.பி.எம். சுபயான் தெரிவித்தார்.

இந்த வாக்குச்சாவடியில் வயோதிபப் பெண்ணொரு வர் வாக்களிப்பதற்கு உதவி கோர, அவருக்கு உதவி செய்யுமாறு அங்கு கடமை யாற்றிவரும் உத்தியோகத் தர் ஒருவரை வாக்குச் சாவ டிக்கு பொறுப்பான தேர் தல் பொறுப்பதிகாரி பணித் துள்ளார்.

அதன் பின்னர், அந்தப் பெண் ஒரு சின்னத்தை தெரி வித்து, அதற்கு புள்ளடியிடு மாறு உத்தியோகத்தரிடம் தெரிவித்தார்.

அதனையடுத்து, அந்த உத் தியோகத்தர் பெண் கூறாத வேறொரு சின்னத் துக்கு புள்ளடியிட்டு வாக்குச் சீட்டை மடித்து பெண்ணி டம் வழங்கியுள்ளார்.

அவர் அந்த வாக்குச் சீட்டை விரித்துப் பார்த்து, தான் தெரிவித்த சின்னத் துக்கு புள்ளடியிட்டுள்ளாரா என பார்த்தபோது வேறொரு சின்னத்துக்கு புள்ள டியிடப்பட்டுள்ளமை தெரிய வர, அங்கு பெருங் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்த வாக் குச்சாவடிக்கு மாவட்ட தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் சென்று உட னடியாக அந்த உத்தியோகத் தரை கடமையில் இருந்து நீக்கி, அவரை தேர்தல் திணைக்களத்துக்கு விசார ணைக்காக அழைத்துச் சென்றதுடன், மீண்டும் ஏற் பாடு செய்யப்பட்டு உரிய முறையில் அப்பெண் ணின் வாக்கு பதிவு செய்யப்பட் டது.

இது தொடர்பான மேல திக விசாரணைகளில் தேர் தல் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# பாராளுமன்ற பதில் செயலாளர் சர்வதேச பிரமுகர்களுடன் சந்திப்பு

கொழும்பு, நவ. 15

வெளிவிவகார, பொதுநல வாய மற்றும் அபிவிருத்தி பணிமனையின் இந்து - பசுபிக் பிராந் திய அபிவிருத்தியின் சிரேஷ்ட நிர்வாக ஆலோசகர் கலாநிதி பென் போவிஸ் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவின் தலைவர் ரொம் சோப்பர் ஆகியோர் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவை சந்தித்தனர்.

அண்மையில் இடம்பெற்ற இந்த சந்திப் பில் பாராளுமன்றத் தின் உதவி செயலாளர் நாய கம் ஹன்ச அபேரத்னவும் கலந்துகொண்டார்.

பிரித்தானிய அரசாங்கத்தின் ஒத்துழைப் புடன் ஜனநாயகத்துக்கான வெஸ்மினிஸ்டர் மன்றம் இலங்கை பாராளு மன்றத்துடன் நெருக்கமாக ஆற்றிவரும் பங்களிப்பை பாரா ளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குல ரத்ன பாராட்டினார்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவிகள் பாரா ளுமன்றத்தை ஒரு நிறுவனமாக மேலும் வலுப் படுத்துவதை சாத்தியமாக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். எதிர்காலத்திலும் இதே ஆதரவை எதிர் பார்ப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

9ஆவது பாராளுமன்றத்தின் சட்டவாக்க சிறப்புகள் மற்றும் 10ஆவது பாராளுமன்றத்தின் நிலைமாறும் சூழல் குறித்த விடயங்களை கலா நிதி பென் போவிஸ் கேட்டறிந்துகொண்டார்.

# வாக்குச்சீட்டை கிழித்தவர் பொலிஸாரால் கைது


கொழும்பு, நவ. 15

நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நிலைய உத்தியோ கத்தர்களுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்து, வாக்குச் சீட்டை கிழித்த நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

வாதுவ, பொதுப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டதாக, வாதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர், வாக்க ளிப்பதற்காக, நேற்று முற்பகல் 11.00 மணியளவில், பொத் துப்பிட்டிய பூஜாராமய விகாரை யில் உள்ள வாக்களிப்பு நிலையத்திற்கு சென்ற வேளை, இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக முடியும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதரர்களால் பகை வரக்கூடும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. புது வேலை அமையும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**சிம்மம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள்.

**துலாம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். திடீர் பயணங்கள் சிறப்பாக அமையும். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக் கட்டும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். அனாவசியச் செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வீட்டாரின் ஆதரவு பெருகும்.


**மகரம்**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும்.


**கும்பம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். பழைய பிரச்சனைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

# வவுனியா நகர பகுதி எங்கும் வீசப்பட்ட வேட்பாளர்களின் துண்டுப் பிரசுரங்கள்

## துரிதமாக அகற்றி எரித்த பொலிஸார்





வவுனியா, நவ. 15

பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று நடைபெற்ற நிலையில் வவுனியா நகரப்பகுதிகளில் வேட்பாளர்களின் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டிருந்தன.

குறிப்பாக நகரத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் இவ்வாறான வேட்பாளர்களின் கட்சி சின்னம் பொறிக்கப்பட்ட அட்டைகள், துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டிருந்தன.

அவற்றைத் துரிதமாக அகற்றி எரிக்கும் செயல்பாடுகளில் பொலிஸார் ஈடுபட்டனர் (எ)

# யாழில் தேர்தல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 15

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திடீரென உயிரிழந்தார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த த. சுபாஸ் (வயது - 34) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரது மரணம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(எ-05)

# பண்ணிசைப் போட்டியில் யாழ். மாணவன் முதலிடம்



வடமராட்சி நவ14

தேசிய மட்ட பண்ணிசைப் போட்டியில் யாழ். அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் வ. யக்சன் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த மாணவனை ஆசிரியை ரவிவர்ணன் அருளினி பயிற்றுவித்திருந்தார். (எ-02)

# பேருந்தில் கசிப்பு கடத்தியவர் கைது

முல்லைத்தீவு, நவ. 15

விசுவமடு பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்தில் 26 லீற்றர் கசிப்பை சூட்சுமமான முறையில் பயணப் பொதியில் மறைத்து கொண்டு வர முற்பட்ட சந்தேகநபர் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைவாக பேருந்தை சோதனையிட்ட போது, கசிப்பை பொலிஸார் பறிமுதல் செய்தது டன் சந்தேகநபரையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் தடயப் பொருட்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார். (எ)

# வடக்கு பயணிகள் அதிகார சபை தலைவராக மகேஸ்வரன் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு மாகாண போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் தலைவராக, யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் க. மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு ஆளுநர் செயலகத்தில் வைத்து இந்த நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு பதிவுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுக்கு வாக்காளர்களை ஏற்ற தயாரான 3 பஸ்கள் பறிமுதல்!

## நுரைச்சோலை பொலிஸ் நடவடிக்கை

கொழும்பு, நவ. 15

**தேர்தல் சட்டத்தை மீறி, நுரைச்சோலையில் இருந்து முல்லைத்தீவுக்கு வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்காக தயாராக இருந்த மூன்று தனியார் பஸ்கள் நுரைச்சோலை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.**

பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார தெரிவித்தார்.

வாக்களிப்பதற்காக வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து, அவர்களை முல்லைத்தீவுக்கு அழைத்துச் செல்வதற்காக மூன்று பஸ்கள் தயாராக இருப்பதாக நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதன்போது குறித்த மூன்று பஸ்களும் பொலிஸ் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களும், அதில் பயணிக்க தயாராக இருந்த பொதுமக்கள் என 25 பேரிடம் இதுவரை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து, மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# கொரிய சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் சங்கம் இலங்கைக்கு உதவி!

கொழும்பு, நவ. 15

விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்குக் கொரியாவின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் சங்கம் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரியாவின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கும் அந்த சங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

கொரியாவில் மீன்பிடித் தொழிலுக்காக இலங்கைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# தேர்தல்கள் சட்டத்தை மாற்றுவது சிக்கலானது!

## மகிந்த தேசப்பிரிய



கொழும்பு, நவ. 15

தற்போதுள்ள தேர்தல்கள் சட்டத்தை மாற்றுவது, நீண்ட கால - சிக்கலான வேலைத்திட்டம் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்ட அமைப்பில் சில தெரிவு செய்யப்பட்ட மாற்றங்களை செய்ய முடியுமானால் அது விரும்பத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 15

அநுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 05.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடையவர் ஆவார்.

இவர் வயலில் உழுது கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி காயமடைந்துள்ள நிலையில் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சட்டவிரோத கடலட்டை பிடித்த 5 பேர் கைது!

மன்னார், நவ. 15

இலங்கை கடற்படையினரால் நேற்று முன் தினம் இரவு மன்னார் வங்காலை மற்றும் சிலாவத்துறை கடற்பகுதியில் நடாத்தப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது கடலட்டைகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் சட்டவிரோதமான முறையில் ஈடுபட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 1055 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில், இலங்கை கடற்படையின் வழக்கமான தேடுதல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நாட்டைச் சுற்றியுள்ள கடலோர மற்றும் கடற்பகுதிகளில் ரோந்துப் பணிகளில் ஈடுபட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களையும் மற்றும் பிடிக்கப்பட்ட கடலட்டைகளையும் மேலதிக நடவடிக்கைகளுக்காக மன்னார் உதவி கடற்றொழில் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் இலங்கை கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (அ)

# தேர்தல் சட்டங்களை மீறிய இரு வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, நவ. 15

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 41 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் கற்பிட்டி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடும் இரு வேட்பாளர்களும் உள்ளடங்குகின்றனர்.

சட்டவிரோதமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல், தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுதல், வாக்குச் சீட்டுகளை புகைப்படம் எடுத்தல் மற்றும் வன்முறை செயல்களில் ஈடுபடல் ஆகிய குற்றங்கள் தொடர்பிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தேர்தல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக செயற்பட்ட அதிகாரிகள் சிலர் வாக்கெடுப்பு நடவடிக்கைகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

# வாக்காளர்களுக்கு பணம் வழங்கிய வேட்பாளர் கையும்மெய்யுமாக கைது

கொழும்பு, நவ. 15

தேர்தல் விதிமுறைகளை மீறி கற்பிட்டி அல்மனார் முகாமுக்கு அருகில் வாக்காளர்களுக்கு பணம் வழங்கிக் கொண்டிருந்தபோது வேட்பாளர் ஒருவர் கற்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வேட்பாளரிடம் ஏற்கனவே 97,200 ரூபா பணம் இருந்ததுடன், அந்தப் பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மோட்டார் சைக்கிள் - பாரஊர்தி மோதி விபத்து; இளைஞன் பலி!

கொழும்பு, நவ. 15

கொழும்பு - இரத்தினபுரி வீதியில் தலாவிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக எஹெலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த லொறி ஒன்றை கடந்து முன்னோக்கிச் செல்ல முயன்ற போது எதிர்த் திசையில் பயணித்த பாரஊர்தி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் எஹெலியகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் இரத்தினபுரி, கலவானை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஆவார்.

இதனையடுத்து பாரஊர்தியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# காலி சிறைச்சாலையில் கைதி தப்பியோட்டம்!

கொழும்பு, நவ. 15

காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காலி, அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்த கைதி ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இந்த கைதி சிறைச்சாலையின் சமையல் அறையில் உணவுகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அம்பலாங்கொடையில் தம்பதி கொலை; கர்ப்பவதிப் பெண் ஒருவர் கைதானார்

கொழும்பு, நவ. 15

காலி வீதி, அம்பலாங்கொடை, உரவத்த பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி தம்பதி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் அம்பலாங்கொடை, மாதம்பே பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொலை செய்யப்பட்ட தம்பதியின் அயல் வீட்டில் வசிக்கும் 29 வயதுடைய கர்ப்பிணிப் பெண் ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கர்ப்பிணிப் பெண் இந்த தம்பதியைக் கொலை செய்வதற்குச் சந்தேக நபருக்கு உதவியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 15

கண்டி - குருநாகல் பிரதான வீதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போயாகொடை பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கண்டியிலிருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த வாகனம் ஒன்றே விபத்துக்குள்ளானது.

விபத்தின் போது வேவுட, உடகொட்டமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவர் உயிரிழந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச்சாவடியை தாக்க திட்டம் ஆயுதங்களுடன் லொறி சிக்கியது!

கொழும்பு, நவ. 15

**வாக்குச்சாவடி ஒன்றைத் தாக்கும் திட்டத்துடன் கைக் குண்டு, துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் நின்ற லொறி ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.**

அம்பாந்தோட்டை - சூரிய வெவ பகுதியில் பிடிபட்ட அந்த லொறியிலிருந்து கைக் குண்டுகள், துப்பாக்கி மற்றும் அதற்கான தோட்டாக்கள், வாள் மற்றும் இரண்டு கத்திகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சூரியவெவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்த லொறி கைப்பற்றப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நிலையத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்காக இந்த ஆயுதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் லொறியின் உரிமையாளரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 15

கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கல்கிசை - படோவிட்ட பகுதியில் இடம்பெற்றது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அதே பிரதேசத்தை சேர்ந்த 30 வயது நபராவார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் தெரிந்தவர்கள் 119 அவசர இலக்கத்துக்கு அறியத் தருமாறு கல்கிசை பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

# சாரதிகள் இன்மையால் 33 ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, நவ. 15

ரயில் சாரதிகள், சாரதி உதவியாளர்கள் இல்லாததால் நேற்றையதினம் 33 ரயில் சேவைகள் இரத்தாகின என்று புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பிரதான பாதையில் 13 ரயில் சேவைகளும், கரையோர பாதையில் 8 ரயில் சேவைகளும், புத்தளம் பாதையில் 6 ரயில்களும் களனி பாதையில் மேலும் 6 ரயில்களும் நேற்று இரத்தாகின. (ஐ)

# சுவரொட்டி ஒட்டிய இருவர் கைதாகினர்!


கொழும்பு, நவ. 15

பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகளை ஒட்டிய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி, கந்தவத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அதே இடத்தைச் சேர்ந்தவர்களாவர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விவசாயம், கல்வி மேம்பாட்டுக்கு நெதர்லாந்து அரசாங்கம் நிதியுதவி



கொழும்பு, நவ. 15

விவசாயம், கல்வி, சுற்றுலா மற்றும் பொதுச் சேவை மேம்பாட்டுக்கு தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி வசதிகளை நெதர்லாந்து அரசாங்கம் வழங்கவுள்ளது.

நெதர்லாந்தின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் இவான் ருட்ஜென்ஸ் உள்ளிட்ட நெதர்லாந்து தூதுக்குழுவினர், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நெதர்லாந்தில் உள்ள வெகனிங்கன் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 7 ஆண்டுகளாக உலக பல்கலைக் கழக தரவரிசையில் முதலிடத்தை பிடித்துள்ள நிலையான பல்கலைக்கழகமாக பெயரிடப்பட்டுள்ளது.

விவசாயம், விவசாயம் - சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் இலங்கையின் முக்கிய பங்குதாரர்களுடன் இணைந்து புதிய ஒத்துழைப்பு திட்டங்களை ஆரம்பிக்க மேற்படி பல்கலைக்கழகம் எதிர்பார்த்துள்ளது.

இதன்படி, இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கையுடன் நெருக்கமாகச் செயல்படுவதுடன் தொழில்நுட்ப மற்றும் நிதி வசதிகளை வழங்கவும் நெதர்லாந்து பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர். (ஐ)

# சரியான திட்டமிடல் இல்லையேல் மீண்டும் நாடு வங்குரோத்தடையும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 15

2028ஆம் ஆண்டு ஆகும் போது கடன் மீள செலுத்தும் பின்னணியை ஏற்படுத்துவதே நாடு எதிர்கொண்டுள்ள பெரும் சவாலாகும். சரியான திட்டமிடலை மேற்கொள்ளாவிட்டால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் இருக்கும் பிரதான பிரச்னை பொருளாதாரமாகும். 2022ஆம் ஆண்டு பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்தது. அதன் பிரகாரம் எமது நாடு வங்குரோத்தடைந்ததாக அறிவிக்கப்பட்டது. எமக்கு முதலாவதாக இருந்தது வங்குரோத்து நிலையில் இருந்து வெளியேறுவதே. அதனை நாங்கள் மாத்திரம் அறிவித்தால் மாத்திரம் போதாது. சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

நாணய நிதியத்துடன் கலந்துரையாடுமாறு உலக நாடுகள் அதன்போது எங்களுக்கு தெரிவித்திருந்தன. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் அவர்களுக்கு அறியத்தருமாறும் அந்த நாடுகள் தெரிவித்தன. நாங்கள் 18 நாடுகளிடம் கடன் பெற்றிருந்தோம். அதற்கு மேலதிகமாக பிணைமுறி பத்திரங்கள் உலகில் தனியாருக்கு விற்பனை செய்திருந்தது.

இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடினோம். வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை ஸ்திர நிலைக்கு கொண்டுவந்து கடன் செலுத்துவது தொடர்பில் நிலைபேறான தன்மையை ஏற்படுத்துவது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடினோம்.

மீண்டும் கடன் செலுத்துவதற்கு எந்தளவு காலம் வழங்க முடியும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடினோம். எமது கடனில் எந்தளவு தொகையை குறைத்து வழங்க முடியுமா என்ற விடயம் தொடர்பாகவும் நாங்கள் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்தோம்.



2028ஆம் ஆண்டில் கடன் செலுத்துவது ஆரம்பமாகும் என நாணய நிதியம் எமக்கு தெரிவித்தது. 2028ஆம் ஆண்டு கடன் செலுத்தாவிட்டால் எமக்கு பிரச்சினையாகும். 2028இல் கடன் செலுத்த ஆரம்பித்து 2042 ஆகும்போது கடன் செலுத்துவதை முடிவுக்கு கொண்டுவருமாறும் அவர்கள் எமக்கு அறிவித்தார்கள்.

குறித்த 18 நாடுகள் மற்றும் பிணைமுறி பத்திரம் மூலம் எங்களுக்கு 8000 முதல் 12000 மில்லியன் டொலர் வரை பெற்றுக்கொள்ள முடியும். அந்த நடவடிக்கையை மேற்கொள்ள எமக்கு பொருளாதார இலக்கு இருக்கிறது. அந்த பொருளாதார இலக்குக்கு அமைய செயல்படாவிட்டால் எமக்கு நன்கொடைகள் கிடைக்காது.

எமக்கு கடன் செலுத்த முடியாது என அறிவித்தால் மீண்டும் நாங்கள் வங்குரோத்து நிலைக்கு ஆளாகுவோம். (ஐ)

# தேர்தல் முறைப்பாடுகள் 3, 822ஆக அதிகரித்தன!

கொழும்பு, நவ. 15

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் செப்ரெம்பர் 26 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை 3 ஆயிரத்து 822 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு ஆயிரத்து 206 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 2 ஆயிரத்து 558 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐ. எம். எவ்வின் விசேட குழு நாளையே இலங்கை வரும்!

கொழும்பு, நவ. 15

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) உயர்மட்ட குழு நாளைய தினம் இலங்கை வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் குழு தேர்தல் நாளான நேற்று இலங்கை வருவதாக இருந்தது. எனினும், தேர்தல் காரணமாக இந்த வருகை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வை பற்றி கலந்துரையாடல்களை நடத்த சர்வதேச நாணய நிதியத்தின் குழு இலங்கை வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன், தலைமையிலான குழு கடந்த மாதம் 4ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்து பல்வேறு சந்திப்புகளை நடத்தியிருந்தது.

இந்த கலந்துரையாடல்களின் பின்னர் வாஷிங்டனில் நடத்திய ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட கிருஷ்ணா சீனிவாசன், மூன்றாம் கட்ட மதிப்பாய்வுக்காக விரைவில் இலங்கை வரவுள்ளதாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் மழைக்கு மத்தியில் அமைதியாக வாக்களிப்பு



மட்டக்களப்பு, நவ. 15

**2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழைக்கு மத்தியில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றன.**


நேற்றுக் காலை மழையுடனான சூழ்நிலையிலும் பொது மக்கள் மிகவும் ஆர்வத்துடன் வாக்களிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக கந்தசாமி பிரபு இருதயபுரம் பாலர் பாடசாலையிலும், எஸ். வனிதா கல்லடி விபுலானந்தா வித்தியாலயத்திலும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களான ஞா. சிறிநேசன் மற்றும் இ. சிறிநாத் ஆகியோர் புனித யோசப் வாஸ் வித்தியாலயத்திலும் தி. சரவணபவன் கல்லடி விநாயகர் வித்தியாலயத்திலும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சியின் வேட்பாளர் பூ. பிரசாந்தன் ஆரையம்பதி மத்திய மகா வித்தியாலயத்திலும், மற்றும் தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர் இரா. சாணக்கியன் பட்டிருப்பு தேசிய பாடசாலையிலும் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரப் பகுதியில் கொட்டும் மழைக்கு மத்தியில் தங்களுடைய வாக்குகளை இவர்கள் செலுத்தினர்.

இதேவேளை, வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் மட்டக்களப்பின் முக்கிய இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

# திருகோணமலையில் சுமுகமாக வாக்களிப்பு




திருகோணமலை, நவ. 15

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நேற்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்த நிலையில் திருகோணமலை மாவட்டத் திலும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

திருகோணமலையில் சுமுகமான முறையில் வாக்களிப்பு நடைபெற்றது. (எ)

## 106 வயது முதியவர் வாக்களித்தார்



திருகோணமலை, நவ. 15

106 வயது முதியவர் யோன் பிலிப் லூயிஸ் பாராளுமன்றத் தேர்தலுக்கான தனது வாக்கை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியிலுள்ள வாக்குச்சாவடி யில் நேற்றுக் காலை செலுத்தி னார்.

யாழ்ப்பாணத்தில் 18. 11. 1918 இல் பிறந்த யோன் பிலிப் லூயிஸ் தனது 22 வயதில் திருகோணமலையில் குடியேறினார். தொடர்ந்து அங்கேயே வாழ்ந்து வருவதாகவும், இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல்கள் அனைத்திலும் தாம் வாக்களித்துள்ளதாகவும் அவர் கூறினார். (எ)

# வாரத்தில் 7 நாட்களும் சதொச திறந்திருக்கும்

மட்டக்களப்பு, நவ. 15

பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கமைய போயா மற்றும் ஏனைய விடுமுறை தினங்கள் உட்பட வாரத்தில் ஏழு நாட்களும் வருடத்தில் 365 நாட்களுமாக மட்டக்களப்பு லங்கா சதொச மெகா சுப்பர்மார்க்கட் திறக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு லங்கா சதொச மெகா சுப்பர் மார்க்கட்டின் முகாமையாளர் எம். ஜே. எம். ஜனூஸ் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வாரத்தில் ஏழு நாட்களிலும் காலை 08 மணி தொடக்கம் இரவு 08 மணி வரையும் போயா நாட்களில் மாத்திரம் காலை 09 மணி தொடக்கம் மாலை 06 மணி வரையும், விசேடமாக தேர்தல் தினங்களில் மாத்திரம் காலை 08 மணி தொடக்கம் மாலை 05 மணி வரையும் திறக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இங்கு பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய, பல சரக்குப் பொருட்கள் கொள்வனவு உட்பட தொலைத்தொடர்பு பட்டியல் கொடுப்பனவு, மின்சார மற்றும் நீர்க் கட்டணம் என்பன செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# அம்பாறையில் ஆர்வத்துடன் வாக்களித்த பொதுமக்கள்

கல்முனை, நவ. 15

பாராளுமன்றத் தேர்தல் முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் 528 வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

கரையோர பிரதேசங்களில் நேற்றுக் காலையில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

2024 பாராளுமன்றத் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 5 இலட்சத்து 55, 432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.



இதேவேளை, நேற்று மாலை முதல் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி கள் இடம்பெற்றன.

## மாணவன்மீது துஷ்பிரயோகம் ஆசிரியருக்கு விளக்கமறியல்

சம்மாந்துறை, நவ. 15

9 வயது பாடசாலை மாணவனை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சந்தேகநபரான 38 வயது ஆசிரியரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரம் 4 இல் கல்வி கற்கும் சிறுவனின் பெற்றோரால் நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபரான 38 வயது (ஆரம்பக் கல்வி) ஆசிரியர் கைது செய்யப்பட்டார். இச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப் பகுதி ஒன்றிலுள்ள பாடசாலையில் இடம் பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ். ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேக நபரான ஆசிரியரை கைது செய்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 27 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவன் சம்மாந்துறை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத வெள்ளத்துக்கு பிறகு ஸ்பெயினில் மீள கனமழை எச்சரிக்கை

மட்ரிட், நவ. 15

**வரலாறு காணாத வெள்ளத்துக்கு பிறகு ஸ்பெயினில் மீண்டும் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் இயல்புநிலை இன்னும் திரும்பவில்லை. இதற்கிடையே மீண்டும் ஸ்பெயினில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


ஸ்பெயின் நாட்டின் தென்கிழக்கு பகுதிகளில் கடந்த மாத இறுதியில் கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஸ்பெயிலுள்ள போரியோடேலா டோரெ மற்றும் வேலன்சியா உள்ளிட்ட நகரங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சுமார் 5 ஆயிரம் வீடுகள் தண்ணீரில் மூழ்கின. கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

வெள்ளப்பெருக்கின்போது பொதுமக்கள் பலர் தங்கள் வீட்டுக் கூரைகளின் மீது ஏறியும், மரங்களைக் கட்டி அணைத்தும் உயிர் தப்பினர். கடும் வெள்ளப்பெருக்கால் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், குடிநீர் கிடைக்காமலும் ஏராளமானோர் அவதியடைந்தனர். இந்த வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது வீடு, உடைமைகள் உள்ளிட்ட அனைத்தையும் இழந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை புரட்டிப் போட்ட இந்த வெள்ளப் பாதிப்பு காரணமாக, நாடு முழுவதும் 3 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. வரலாறு காணாத அளவில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக ஸ்பெயினில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 223 ஆக அதிகரித்தது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இரு வாரங்கள் கடந்த பிறகும், பாதிக்கப்பட்ட பல இடங்களில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை. இந்த நிலையில், மீண்டும் ஸ்பெய்னில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கிழக்கு டராகோனா மற்றும் தெற்கு மலாகா மாகாணங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்படி, 12 மணி நேரத்தில் 180 மில்லி மீற்றர் மழைப்பொழிவு பதிவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)



# திப்பு சுல்தானின் வாள் ரூ. 3. 4 கோடிக்கு ஏலம்

லண்டன், நவ. 15

இந்தியாவின் மைசூர் மன்னர் திப்பு சுல்தானுக்கும், ஆங்கிலேய கிழக்கிந்திய படைகளுக்கும் இடையே சிறீரங்கப்பட்டினத்தில் கடந்த 1799ஆம் ஆண்டு நடந்த போரில் திப்பு சுல்தான் கொல்லப்பட்டார். இந்தப் போரில் திப்பு சுல்தான் பயன்படுத்திய வாள் ஆங்கிலேயர்களிடம் சிக்கியது.

தற்போது லண்டனிலுள்ள பான்ஹாம்ஸ் ஏல மையத்தில் அந்த வாள் 3. 4 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

(எ)

# அமெரிக்க கப்பல்களின் மீது ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்

சனா, நவ. 15

அமெரிக்க போர்க் கப்பல்களை இலக்கு வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். இந்தக் குழுக்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்க போர்க் கப்பல்களை இலக்கு வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர்.

ஏமன் கடற்பகுதி அருகே செங்கடல் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த அமெரிக்க போர்க் கப்பல்களை குறி வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தினர். 5 ஏவுகணைகள், 8 ட்ரோன்கள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனால், இந்த தாக்குதல்களை முறியடித்துவிட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும், இந்தச் சம்பவத்தில் போர்க் கப்பல்களுக்கோ, படையினருக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (எ)

# ட்ரம்ப் ஆட்சி பிடிக்காதவர்களுக்கு சொகுசு கப்பல் சுற்றுலாத் திட்டம்

வாஷிங்டன், நவ. 15

ட்ரம்ப் ஆட்சியின் போது 4 ஆண்டு காலமும் அமெரிக்காவில் தங்க விரும்பாதவர்களுக்கு சொகுசு கப்பல் சுற்றுலாத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக எதிர்வரும் ஜனவரி மாதம், ட்ரம்ப் பதவியேற்கவுள்ளார். இந்த நிலையில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள வில்லி வீ ரெசிடென்சஸ் எனப்படும் நிறுவனம் ஒரு சொகுசு கப்பல் சுற்றுலாத் திட்டத்தை அறிவித்துள்ளது.



இந்த சுற்றுப்பயணம் ஓராண்டு முதல் 4 ஆண்டு கால அளவைக்கொண்டதாக இருக்கும். அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பொறுப்பேற்க இருக்கும் ட்ரம்பின் ஆட்சியைத் தவிர்க்க விரும்புபவர்களுக்கு ஏற்றதாக இந்த சொகுசுக்கப்பல் சுற்றுலாத் திட்டம் இருக்கும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. அவரது ஆட்சி காலத்தில் அமெரிக்க நாட்டில் இருக்காமல், சொகுசுக் கப்பலிலேயே 4 ஆண்டு காலத்தைக் கழிக்கலாம் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

# பராமரிப்பு இல்லங்களில் கொடூர சித்திரவதைகள்

## பகிரங்க மன்னிப்பு கோரிய நியூசிலாந்து அரசு

வெலிங்டன், நவ. 15

பராமரிப்பு இல்லங்களில் 70 ஆண்டுகளாக நேர்ந்த கொடுமைகளுக்காக நியூசிலாந்து அரசு பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளது.

நியூசிலாந்தில் கடந்த 1950ஆம் ஆண்டு முதல் அரசு கட்டுப்பாட்டில் இயங்கி வந்த பராமரிப்பு இல்லங்களில், சுமார் 70 ஆண்டுகளுக்கும் மேலாக ஏராளமான சிறுவர்களும், பெண்களும் கொடூர சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக பாலியல் துன்புறுத்தல், கருத்தடை, மின்சாரம் பாய்ச்சுதல் உள்ளிட்ட பல கொடுமைகள் நிகழ்ந்ததாகவும், 1970களில் இந்த துன்புறுத்தல்கள் உச்சத்தை எட்டியதாகவும் கூறப்படுகிறது.

இந்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக அரசு தரப்பில் விசாரணை குழு அமைக்கப்பட்டது. மொத்தம் 53 இலட்சம் மக்கள் தொகையை கொண்ட நியூசிலாந்து நாட்டில், பராமரிப்பு இல்லங்களில் துன்புறுத்தல்களை அனுபவித்து உயிர்பிழைத்தாக கூறப்படும் சுமார் 2,300 பேரிடம் விசாரணை குழுவினர் நேரடியாக விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில் அரசு பராமரிப்பு இல்லங்களில் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக நிகழ்ந்த கொடூரங்களுக்காக நியூசிலாந்தின் தற்போதைய அரசு மற்றும் முந்தைய அரசுகளின் சார்பில் பகிரங்க மன்னிப்பு கோருவதாக அந்த நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் தெரிவித்தார். மேலும், விசாரணை குழு வழங்கிய 28 பரிந்துரைகளை நியூசிலாந்து அரசு நிறைவேற்றியுள்ளதாக குறிப்பிட்ட அவர், அடுத்த ஆண்டு முதல் நவம்பர் 12ஆம் திகதி தேசிய நினைவு தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று தெரிவித்தார்.

(எ)

# கைதிகள் இடையே சிறையில் மோதல்!

கியூடோ, நவ. 15

ஈக்குவடோரில் சிறையில் கைதிகள் இடையே நடந்த மோதலில் 15 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு ஈக்குவடோர். இந்த நாட்டின் மிகப்பெரிய சிறைச்சாலை கவ்யாஹூலி நகரில் அமைந்துள்ளது. இந்தச் சிறைச்சாலையில் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய ஆயிரக்கணக்கான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்தச் சிறைச்சாலையில் இன்று அதிகாலை கைதிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் கைதிகள் 15 பேர் உயிரிழந்தனர். மேலும், 14 பேர் படுகாயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து விரைந்து வந்த போலீசார், பாதுகாப்புப்படையினர் மோதலை தடுத்து நிறுத்தினர். மேலும், இந்த மோதலுக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈக்குவடோரில் கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் சிறைச்சாலைகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 400இற்கும் மேற்பட்ட கைதிகள் உயிரிழந்தனர்.



# அஜர்பைஜானில் கவனம் ஈர்க்கும் இறந்த திமிங்கலத்தின் மாதிரி

அஜர்பைஜான், நவ. 15

பருவநிலை உச்சி மாநாடு நடைபெறும் அஜர்பைஜானில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 'இறந்த திமிங்கல மாதிரி' மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

உலகத் தலைவர்கள் பங்கேற்கும், இரண்டு நாள் பருவநிலை நடவடிக்கை குறித்த உச்சி மாநாடு அஜர்பைஜானில் உள்ள பாகு நகரில் நவம்பர் 11 தொடங்கி வரும் 22 ஆம் தேதி வரை நடைபெற்று வருகிறது. இச்சூழலில் பாகு கடற்கரையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள 'இறந்த திமிங்கல மாதிரி' கவனம் பெற்றுள்ளது. காயங்களில் இறந்து இரத்தம் வழிந்து உறைந்து திமிங்கலம் ஒன்று கரையொதுங்கியிருப்பது போல் மிகத் தத்ரூபமாக இந்த மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது.

கப்டன் பூமர் என்பவர் உருவாக்கியுள்ள இந்த திமிங்கல மாதிரி பருவநிலை மாற்றம் திமிங்கல வகை மீன்கள் மீது ஏற்படுத்தும் பாதிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கூடவே பருவநிலை மாற்றத்தால் சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திமிங்கல மாதிரியைக் காண பாகு நகரவாசிகள் கூட்டம் கூட்டமாகக் கடற்கரைக்கு வந்து செல்கின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசல் மெண்டிஸ், அவிஷ்க சதமடித்து அசத்தல்

# 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி

தம்புள்ளை, நவ. 15

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமனில் முடிவடைந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையே ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது.

முதலாவது ஒருநாள் போட்டி தம்புள்ளை மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது. இதையடுத்து பதும் நிஸ்ஸங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் களமிறங்கினர்.

இதில் பதும் நிஸ்ஸங்க 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து அவிஷ்க பெர்னாண்டோ களமிறங்கினார். குசல் மெண்டிஸ் - பெர்னாண்டோ இணை நிதானமாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த இணையை பிரிக்க முடியாமல் நியூசிலாந்து பந்து வீச்சாளர்கள் திணறினர். நிதானமாக விளையாடி இருவரும் சதம் அடித்து அசத்தினர். இதில் அவிஷ்க பெர்னாண்டோ 100 ஓட்டங்களிலும், குசல் மெண்டிஸ் 143 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய சதீர சமரவிக்கிரம 5 ஓட்டங்களிலும், அசலங்க 40 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இலங்கை அணி 49. 2 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 324 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை பெய்தது. இதனால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. இறுதியில் இலங்கையின் இன்னிங்ஸ் அத்துடன் முடிக்கப்பட்டது.



இதையடுத்து டி. எல். எஸ். முறைப்படி நியூசிலாந்து அணிக்கு 27 ஓவர்களில் 221 ஓட்டங்கள் அடிக்க வேண்டும் என வெற்றி இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது. தொடர்ந்து நியூசிலாந்து அணி தனது இன்னிங்ஸை விளையாடியது.

தொடக்கம் முதலே இலங்கை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் நியூசிலாந்து அணி வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் நியூசிலாந்து அணி 27 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 175 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது . அதிகபட்சமாக வில் யங் 48 ஓட்டங்கள் எடுத்தார் . இதனால் 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியால் ஒருநாள் தொடரில் 1 - 0 என இலங்கை முன்னிலை வகிக்கிறது. (எ)

## ஜப்பான் பட்மிண்டன் தொடர் பி. வி. சிந்து முன்னேற்றம்


ரோக்கியோ, நவ. 15

ஜப்பானில் நடைபெற்று வரும் பட்மிண்டன் போட்டி தொடரில் இந்தியாவின் பி. வி. சிந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

குமாமோட்டோ மாஸ்டர்ஸ் சர்வதேச பட்மிண்டன் போட்டி ஜப்பானில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த மகளிர் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி. வி. சிந்து, தாய்லாந்து வீராங்கனை பூசனன் ஒங்பாம்ருங்பானை எதிர்கொண்டார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய பி. வி. சிந்து 21 - 12, 21 - 8 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்திய வீரர் லக்‌ஷ்யா சென், மலேசியாவின் லியோங் ஜங் ஹாவை சந்தித்தார். இதில் லக்‌ஷ்யா சென் 22 - 20, 17 - 21, 16 - 21 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார். (எ)



## ஐ. சி. சி. விதிமுறைகளை மீறிய இங்கிலாந்து வீரருக்கு அபராதம்


பிரிட்ஜ்டவுன், நவ. 15

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் ரீஸ் டாப்லீ ஐ. சி. சி. விதிமுறைகளை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி 1 - 2 என்ற கணக்கில் இழந்தது. இதையடுத்து, 5 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் இங்கிலாந்து 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ரி - 20 போட்டி நேற்று நடைபெற்றது.

இந்த நிலையில் முதல் ரி - 20 போட்டியில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ரீஸ் டாப்லீ ஐ. சி. சியின் விதி 2. 2-ஐ மீறியதாக கூறப்படுகிறது. அந்த விதியின் படி, சர்வதேச போட்டிகளில் ஆடுகளத்தின் பொருட்களையோ அல்லது கிரிக்கெட் உபகரணங்களையோ, ஆடைகளையோ அவமதித்தால் அபராதம் என்று கூறப்பட்டுள்ளது. இங்கிலாந்து அணி களத்தடுப்பு செய்து கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ரீஸ் டாப்லீ நாற்காலியை எடுத்து படிக்கட்டின் கைப்பிடிகளை ஓங்கி அடித்தார். இதற்காக போட்டி ஊதியத்தில் இருந்து 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த அபராதத்தை ரீஸ் டாப்லீ ஏற்றுக்கொண்டார். (எ)



## 3ஆவது ரி - 20 போட்டியில் வெற்றி பெற்றது இந்தியா



செஞ்சூரியன், நவ. 15

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது ரி - 20 போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியாவும், 2ஆவது போட்டியில் தென்னாபிரிக்காவும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியது.

இந்த நிலையில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ரி - 20 போட்டி செஞ்சூரியன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரராக களமிறங்கிய சஞ்சு சாம்சன் தான் சந்தித்த 2ஆவது பந்திலேயே ஓட்டம் எதுவுமின்றி ஆட்டமிழந்து வெளியேறினார்.

மற்றொரு தொடக்க வீரரான அபிஷேக் சர்மாவுடன், திலக் வர்மா ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக விளையாடி ஓட்டக்குவிப்பில் ஈடுபட்டனர். 2ஆவது விக்கெட்டுக்கு 107 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் அபிஷேக் சர்மா அரைச் சதமடித்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் சூர்யகுமார் யாதவ் ஓர் ஓட்டத்திலும், ஹர்திக் பாண்டியா 18 ஓட்டங்களிலும், ரிங்கு சிங் 8 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

அதிரடியைத் தொடர்ந்த திலக் வர்மா சதமடித்து அசத்தினார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 219 ஓட்டங்கள் குவித்தது. திலக் வர்மா 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து 220 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா அணி துடுப்பெடுத்தாடியது. முதலில் களமிறங்கிய வீரர்கள் இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களில் தங்களது விக்கெட்களை பறிகொடுத்தனர். இதையடுத்து களமிறங்கிய டேவிட் மில்லர் மற்றும் ஹென்ரிச் கிளாசன் நிதானமாக விளையாடினர். ஆனால், அந்த இணைப்பாட்டமும் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. மில்லர் 18 ஓட்டங்களும், கிளாசன் 41 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதிக் கட்டத்தில் மார்க்கோ ஜோன்சன் அதிரடியாக விளையாடி தென்னாபிரிக்க அணி கௌரவமான நிலையை எட்டியது. 20 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி 208 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 7 விக்கெட்களை இழந்தது. இதன் மூலம் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. தென்னாபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக மார்க்கோ ஜோன்சன் 54 ஓட்டங்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அர்ஷ்தீப்சிங் 3 விக்கெட்களும், வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்களும் வீழ்த்தினர். இதன்மூலம் 4 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடரில் இந்தியா 2 போட்டிகளில் வெற்றி பெற்று முன்னிலை பெற்றுள்ளது. (எ)

## இறுதி சுற்று தொடரில் வென்றார் அல்காரஸ்

துரின், நவ. 15

ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் ரூப்லெவை வீழ்த்தி கார்லஸ் அல்காரஸ் வெற்றி பெற்றார்.

உலகின் முன்னணி வீரர்கள் (ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு) மட்டும் பங்கேற்கும் ஏ. டி. பி. இறுதிச் சுற்று எனப்படும் ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி இத்தாலியிலுள்ள துரின் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லெவுடன் மோதினார்.

தொடக்கம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6 - 3, 7 - 6 (10 - 8) என்ற செட் கணக்கில் ஆண்ட்ரே ரூப்லெவை வீழ்த்தி கார்லஸ் அல்காரஸ் வெற்றி பெற்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு உட்பட...

4ஐ தேசிய மக்கள் சக்தியும் ஓர் ஆச னத்தை ஐக்கிய மக்கள் சக்தியும் கைப் பற்றின.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத் தைப் பொறுத்தவரை அதிகாலை வரை யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை தொகுதிக ளின் முடிவுகள் உத்தியோ கபூர்வமாக வெளியாகியிருந்தன. இவற் றில் தேசிய மக்கள் சக்தியே முன்னிலை பெற்றிருந் தது. அடுத்த இடங்களை இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி), மருத்துவர் அர்ச்சுனாவின் சுயேச்சைக் குழு - 17, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மற் றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என் பன முன் னிலை பெற்றிருந்தன. வன்னித் தேர்தல் மாவட் டத்திலும் இதே நிலை மையே காணப்பட்டது. (ஐ)

## வாக்களிக்கா...

தேர்தல் நேற்று நடைபெற்றது. இந்த இரு தேர்தல்களிலும் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயி ரத்து 354 வாக்காளர்கள் தகுதி பெற்றி ருந்தனர்.

இதில், ஜனாதிபதித் தேர்தலில் 79. 46 வீதமானவர்களே வாக்களித்தனர். அதாவது 35 இலட்சத்து 20 ஆயிரத்து 438 வாக்காளர்கள் (21.54 வீதத்தினர்) வாக்களிக்கவில்லை.

இந்த நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் இது மேலும் 15.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதனால், வாக்களிக் காதவர்களின் சதவீதம் 37ஆக அதிகரித் துள்ளது. இதன்படி, 61 இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களிக்கவில்லை என்று கணிக்கப்படு கின்றது. எனினும், இந்த செய்தி எழுதப் படும் வரை உத்தியோகபூர்வமான வாக்களிப்பு சதவீதம் வெளியிடப்பட வில்லை என்பதும் நினைவில் கொள் ளத்தக்கது. (ஐ)

## வடக்கு...

கருத்து தெரிவித்தபோதே ஜனாதி பதி இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டு மக்கள் பலமான பாராளு மன்றத்தை தேசிய மக்கள் சக்திக்கு பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலிருந்து நாட்டில் புதிய அரசியல் கலாசார மொன்று உருவாகியுள்ளது. தேர்தல் வெற்றியை தொடர்ந்து நாம் அந்த வெற்றியை ஏனையவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கொண்டாடவேண் டியது அவசியமாகும். ஒரு தேர்தலில் மாத்திரம் அந்த நடைமுறையைக் கடைப்பிடித்து விட்டு மற்றைய தேர்த லில் அதனை நிர்மூலமாக்க முடியாது. அது எம்முடைய அரசியல் கலாசாரமாக மாறவேண்டும்.

மக்கள் விரும்பும் புதிய சட்டங்க ளைக் கொண்டுவர அனைவரும் உடன் படவேண்டியது அவசியமாகும்.மக்க ளுக்கு ஏற்புடையதல்லாத சட்டங்களை கொண்டுவரும் சந்தர்ப்பத்திலேயே மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவ சியமாகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான் மையை ஏனைய கட்சிகள் மக்களின் விருப்புக்கு விரோதமாகப் பயன்படுத்தி யது. அத்தகைய தரப்புக்கே பெரும் பான்மை என்பது அவசியமாகும். வடக்கு மக்களும் மாற்றத்தை எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கான மாற்றத்தை வழங்கவேண்டிய அரசியல் அணியினர் அவர்களுக்கு நெருக்கமாக இருக்க வில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தல் வெற் றியை தொடர்ந்து தேசிய மக்கள் சக்தியின் மீது வடக்கு மக்கள் பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர். வடக்கு, கிழக்கு,தெற்கு,மேற்கு மக்கள் விரும்பும் அரசாங்கத்தை உருவாக்குவதே எம்மு டைய எதிர்பார்ப்பாகும்-என்றார். (அ)

# தனது மகளையே வன்புணர்ந்த தந்தைக்கு 10 ஆண்டுகள் கடூழியம்!

வவுனியா, நவ. 15

பத்து வயதேயான தனது சொந்த மகளையே வன்பு ணர்ந்த தந்தைக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண் டனை விதித்தார் வவுனியா மேல் நீதிமன்ற நீதி பதி மா. இளஞ்செழியன்.

2018 ஜூன் மாதம் இந்த சம்பவம் இடம்பெற்றது.

தன்னை சத்தம் போட விடாது தடுக் கும்முகமாக வன்மையாக தந்தை நடந்து கொண்டார் என்று சிறுமி நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

சம்பவம் நடந்தன்று இரவு திடீரென தான் எழுந்த போது மகளையும் தனது கணவரையும் காணவில்லை எனவும், மதுபோதையில் மகளை தகாத முறைக்கு கண வன் உட்படுத்தியதை தான் நேரில் கண்டார் என்றும் இதையடுத்து தான் பொலிஸாரை அழைத்தார் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயாரும் குற்றவாளியின் மனைவியும் சாட்சிய மளித்தார்.

"குற்றவாளிக்கு கடுமையான தண் டனை வழங்குவதே பொருத்தம்", என்று தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன். குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறையும் 2 இலட் சம் ரூபாய் நட்டஈடும் வழங்கி தீர்ப்பளித்தார்.

மேலும், நட்டஈட்டை செலுத்த தவறும் பட்சத்தில் இரு ஆண்டுகள் கடூழிய சிறை மற்றும் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்தும் நேற்றுமுன் தினம் உத்தரவிட்டார்.

அரச சட்டத்தரணி அனுசங்கன், சட்டமா அதிபர் சார்பில் வழக்கை நடத்தி நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் வழக்கை எண்பித்துள்ளார் என நீதிபதி இளஞ் செழியன் தீர்ப்பில் குறிப் பிட்டுள்ளார். (ஐ)

## நேற்று...

ஈடுபட்டமை போன்ற தேர்தல் விதி களை மீறிய குற்றச்சாட்டுகளிலேயே இவர்கள் அனைவரும் கைது செய்யப் பட்டனர். (ஐ)

## மாத்தளையில்...

உயிரிழந்தனர். அத்துடன், வானில் இருந்த ஐவரும் பேருந்தில் பயணித்த 37 பேரும் காயங்களுக்கு உள்ளாகினர்.

சுற்றுலா சென்ற பேருந்தே விபத்துக் குள்ளானதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## வடக்கு கிழக்கில்...

திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டத்தில் 62.5 வீத வாக்குகளும் பதிவாகின.

எனினும், உத்தியோகபூர்வமான வாக்களிப்பு சதவீதம் இன்றைய தினமே தெரிய வரும் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## வாக்கு...

தடை விதித்திருந்தனர். இதனால், அங்கு பணியிலிருந்த பொலிஸார் வாகனத்தை அங்கிருந்து எடுக்குமாறு கூறினர்.

ஆனால், வாகனத்தை எடுக்க மறுத்த அர்ச்சுனா பொலிஸாரை தகாத வார்த்தைகளை பயன்படுத்தி திட்டியுள்ளார். இதையடுத்து, அங்கு பரபரப்பு ஏற்பட்டது. எனினும், சிறிது நேரத்தில் அங்கு நிலைமை சுமுகத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதைத் தொடர்ந்து, .யாழ்ப்பாணம் வாக்கு எண்ணும் நிலையம் அருகே கலக மடக்கும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட் டனர். (ஐ)

## தமிழ்த்...

முதலிடத்தை பிடித்தது. மட்டக்க ளப்பிலும் இரண்டாவது இடத்தில் தேசிய மக்கள் சக்தியே காணப்படு கின்றது.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் தென்னிலங்கை கட்சி ஒன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான ஆதரவு கிடைத்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட பிளவுகள் - பிரிவுகளால் ஏற்பட்ட கடும் அதிருப்தியே தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு பின்னடைவை ஏற் படுத்தியுள்ளன என்று கூறப்படுகிறது. இதேசமயம், தேசிய மக்கள் சக்திக்கு தென்னிலங்கையில் ஏற்பட்ட ஆதரவு அலையும் - வடக்கு, கிழக்கில் ஜே. வி. பி. தொடர்பாக கட்டமைக்கப்பட்ட பிம்பங்களால் பெரும்பாலான இளை யோரை கவர்ந்தமையுமே அந்தக் கட் சிக்கு வடக்கு, கிழக்கில் வாக்குகள் அதி கரிக்கக் காரணம் என்றும் கூறப்படு றது. (ஐ)

# தேர்தல் கடமையில் இருந்த அதிகாரிகள் இருவர் மரணம்!

கொழும்பு, நவ. 15

வாக்களிப்பு நிலையங்களில் கடமை யாற்றிய இரண்டு உத்தியோகத்தர்கள் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்த தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி காவல்துறைமா அதிபர் நிஹால் தல்துவ தெரி வித்தார்.

கெஸ்பேவ வாக்களிப்பு நிலைய அதி காரியாக கடமையாற்றிய ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

மேலும், கொபேகனே பிரதேசத்தில் 57 வயதுடைய வாக்களிப்பு நிலைய ஊழியர் ஒருவர் திடீர் சுகவீனம் கார ணமாக உயிரிழந்துள்ளதாக அவர் குறிப் பிட்டார். (அ)

# வன்னி தேர்தல் மாவட்டத்தில் 65.5 சதவீத வாக்குகள் பதிவு!

வவுனியா, நவ. 15

வன்னி தேர்தல் மாவட்டத்தில் 65.5 சதவீத வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள் ளதாக வன்னி மாவட்ட தேர்தல் தெரி வத்தாட்சி அலுவலர் பி.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத் துத் தெரிவிக்கும் போதே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - வன்னி மாவட்டத்தில் 65.5 வீத வாக்குகள் பதிவாகி யுள்ளன. வவுனியா வில் 63.75 வாக்குகளும், முல்லைத் தீவில் 62.45 வாக்குகளும், மன்னாரில்70 வீதமான வாக்குகளும் பதிவாகியுள் ளன.

இந்நிலையில் இதுவரை மாவட் டத்தின் அனைத்து பகுதிகளிலும் அசம் பாவிதங்கள் எவையும் இன்றி சுமூக மான முறையில் வாக்களிப்புச் செயற்பாடுகள் இடம் பெற்று முடிந்துள்ளன - என்றார். (அ)

# கோடரியுடன் சென்ற பழங்குடிகள் வாக்களிப்பதற்கு அனுமதி மறுப்பு!

கொழும்பு, நவ. 15

பாராளுமன்றத் தேர்தலுக்காக, தம்பானை பழங்குடி கிராமத்தில் உள்ள தம்பானை கனிஷ்ட கல்லூரிக்கு வாக்க ளிக்கச் சென்ற பழங்குடி துணைத் தலை வர் குண பாண்டியலா எத்தோ மற்றும் அவரது குடும்பத்தினர் வாக்களிக்காமல் திரும்பிச் சென்ற சம்பவம் நேற்றுக் காலை பதிவாகியுள்ளது.

ஆதிவாசியினரின் கலாசாரத்தின் அடையாள மான கோடரியைச் சுமந்து கொண்டு வாக்குச் சாவடிக்கு வாக்களிக்க சென்றதாகக் கூறி பழங்குடி துணைத் தலைவருக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதி காரி வழங்க மறுத்துள்ளார்.

இதனால், பழங்குடியின துணைத் தலைவர் குடும்பத்துடன் வாக்களிக்கா மல் திரும்பிச் சென்றுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட பழங்குடியின துணைத் தலைவர், பழங்குடியினரின் உரிமைகள் மற்றும் பழங்குடியினரின் கலாசாரம் பற்றி அறியாத அரச அதிகாரிகளைத் தேர்தல் பணிக்கான மையங்களுக்கு அனுப்புவதைத் தவிருங்கள். இச்சம்ப வம் என்னை மிகுந்த அதிருப்திக்குள் ளாக்கியுள்ளது எனக் குறிப்பிட்டார்.(அ)

# நெடுந்தீவில் இருந்து ஹெலியில் எடுத்துவரப்பட்ட வாக்குப்பெட்டி!

கொழும்பு, நவ. 15

பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடவடிக்கை நேற்று மாலை 4 மணியள வில் நிறைவடைந்ததையடுத்து நெடுந் தீவில் இருந்து வாக்குப் பெட்டிகள் விமானப்படையினரின் விசேட உலங்கு வானூர்தியில் யாழ்.மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டன.

யாழ்.மாவட்டத்தின் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவு ஆகிய தீவகப் பகுதிகளுக்கு நேற்று முன் தினம் விசேட படகுகள் மூலம் வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டன. நேற்று வாக்குப்பதிவு நடவடிக்கை நிறைவடைந்ததையடுத்து நெடுந்தீவு தவிர ஏனைய தீவகப் பகுதிகளில் இருந்து வாக்குப் பெட்டிகள் விசேட படகுகளில் குறிகட்டுவான் பகுதிக்கு எடுத்து வரப்பட்டு, பஸ்களில் வாக் கெண்ணும் நிலையமான யாழ்.மத்திய கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டன.

நெடுந்தீவில் இருந்து வாக்குப்பெட்டி கள் விமானப்படையினரின் விசேட உலங்கு வானூர்தியில் எடுத்து வரப்பட் டன.

உலங்குவானூர்தியில் கொண்டுவரப் பட்ட வாக்குப்பெட்டியை யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மற் றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத் தர்கள் பொறுப்பேற்றனர்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பாராளுமன்றத் தேர்தல் 2024 - தொகுதி ரீதியான முடிவுகள்

மாவட்டம் : யாழ். தொகுதி : ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 3,296 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 2,626 |
| தேசிய மக்கள் சக்தி | 2,116 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 1,000 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 624 |
| சுயேச்சை குழு - 17 | 601 |
| சுயேச்சை குழு - 14 | 531 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 288 |
| பதியப்பட்ட வாக்குகள் | **24,842** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **14,950** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,758** |

மாவட்டம் : யாழ்ப்பாணம் தொகுதி : யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,066 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 2,582 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 1,612 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 1,361 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,124 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,076 |
| சுயேச்சை குழு - 17 | 1,067 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 626 |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | 449 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 419 |
| சுயேச்சைக் குழு - 14 | 368 |
| பதியப்பட்ட வாக்குகள் | **37,397** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **23,631** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,765** |

மாவட்டம் : யாழ்ப்பாணம் தொகுதி : நல்லூர்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 8,831 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 3,527 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 3,228 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 2,396 |
| சுயேச்சை குழு - 17 | 2,279 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,528 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 1,104 |
| சுயேச்சைக் குழு - 14 | 1,034 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 760 |
| சுயேச்சைக் குழு - 02 | 664 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 418 |
| பதியப்பட்ட வாக்குகள் | **50,806** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **30,247** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,163** |

மாவட்டம் : அ'தோட்டை தொகுதி : பெலியத்தை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 36,002 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,008 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 5,857 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,381 |
| சர்வஜன அதிகாரம் | 929 |
| பதியப்பட்ட வாக்குகள் | **79,700** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **56,658** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,242** |

மாவட்டம் : அ'தோட்டை தொகுதி : முல்கிரிகல

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 42,699 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 10,302 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 6,042 |
| புதிய ஜனநாயக முன்னணி | 4,281 |
| சர்வஜன அதிகாரம் | 1,550 |
| பதியப்பட்ட வாக்குகள் | **106,369** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **73,689** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **3,739** |

மாவட்டம் : அ'தோட்டை தொகுதி : திஸ்ஸமகராகம

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 76,841 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 23,262 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 7,531 |
| புதிய ஜனநாயக முன்னணி | 4,111 |
| சர்வஜன அதிகாரம் | 1,623 |
| பதியப்பட்ட வாக்குகள் | **181,536** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **124,384** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **6,247** |

மாவட்டம் : அம்பாந்தோட்டை தொகுதி : தங்காலை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 61,215 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 9,975 |
| புதிய ஜனநாயக முன்னணி | 6,750 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 5,549 |
| சர்வஜன அதிகாரம் | 1,274 |
| பதியப்பட்ட வாக்குகள் | **130,651** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **92,721** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **4,239** |

மாவட்டம் : காலி தொகுதி : காலி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 39,707 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 9,410 |
| புதிய ஜனநாயக முன்னணி | 3,741 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 1,885 |
| சர்வஜன அதிகாரம் | 7,151 |
| பதியப்பட்ட வாக்குகள் | **83,718** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **58,264** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,667** |

மாவட்டம் : காலி தொகுதி : பலப்பிட்டிய

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 21,681 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 5,588 |
| புதிய ஜனநாயக முன்னணி | 1,471 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 1,318 |
| சர்வஜன அதிகாரம் | 1,855 |
| பதியப்பட்ட வாக்குகள் | **54,925** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **34,676** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,392** |

மாவட்டம் : காலி தொகுதி : கரந்தெனிய

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 65,787 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,649 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 2,258 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,125 |
| சர்வஜன அதிகாரம் | 504 |
| பதியப்பட்ட வாக்குகள் | **77,608** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **51,409** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,809** |

மாவட்டம் : பதுளை தொகுதி : பதுளை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 24,452 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,597 |
| புதிய ஜனநாயக முன்னணி | 4,227 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 641 |
| ஐக்கிய ஜனநாயகக் குரல் | 508 |
| பதியப்பட்ட வாக்குகள் | **57,405** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **41,372** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,284** |

மாவட்டம் : காலி தொகுதி : அக்மீமன

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 48,629 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,496 |
| புதிய ஜனநாயக முன்னணி | 5,008 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 4,153 |
| சர்வஜன அதிகாரம் | 885 |
| பதியப்பட்ட வாக்குகள் | **103,518** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **71,165** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,155** |

மாவட்டம் : காலி தொகுதி : பத்தேகம

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 41,294 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 12,413 |
| புதிய ஜனநாயக முன்னணி | 3,967 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 3,558 |
| சர்வஜன அதிகாரம் | 972 |
| பதியப்பட்ட வாக்குகள் | **100,128** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **68,255** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **3,540** |

மாவட்டம் : காலி தொகுதி : பெந்தரஎல்பிட்டி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 39,475 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 9,326 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 3,163 |
| ஐக்கிய ஜனநாயக குரல் | 2,705 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,219 |
| பதியப்பட்ட வாக்குகள் | **92,167** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **62,362** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,500** |

மாவட்டம் : காலி தொகுதி : கினிதுவ

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 40,170 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 15,498 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 3,320 |
| புதிய ஜனநாயக முன்னணி | 3,044 |
| சர்வஜன அதிகாரம் | 2,880 |
| பதியப்பட்ட வாக்குகள் | **102,924** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **70,816** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **3,285** |

மாவட்டம் : காலி தொகுதி : ராகம

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 33,113 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,083 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,751 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 3,408 |
| சர்வஜன அதிகாரம் | 1,957 |
| பதியப்பட்ட வாக்குகள் | **80,811** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **51,992** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,009** |

மாவட்டம் : காலி தொகுதி : ஹபராதுவ

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 38,080 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,964 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,116 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 3,217 |
| சர்வஜன அதிகாரம் | 991 |
| பதியப்பட்ட வாக்குகள் | **85,347** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **56,091** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,074** |

மாவட்டம் : காலி தொகுதி : அம்பலாங்கொடை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 36,196 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,536 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,047 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 3,075 |
| சர்வஜன அதிகாரம் | 1,123 |
| பதியப்பட்ட வாக்குகள் | **79,776** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **53,465** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,814** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.